1969 மார்ச் 31]

திரு. கே. வினாயகம் : என்னிடத்தில் இருக்கிற கேள்வி, ஆங்கிலத்தில் உள்ளதைப் பார்த்து நான் கேட்டேன்.

Protective net does not men only for the head.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : "நெட்" என்பதற்கு என்ன பொருள் ?,

திரு. கே. வினாயகம் : வலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது வலை இல்லை. நீங்கள் சொல்வது ஷீல்ட்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, தொடர்ந்து ஆங்கிலக் கேள்வியில் if so, how much would that steel—helmeted protective net cost ? என்று இருக்கிறது. ஹெல்மெட் என்றால் என்ன ?

THIRU K. VINAYAKAM : Helmet means also armour.

மாண்புமிகு திரு. பேரவைத்தலைவர்: அது வேறு. ஹெல்மெட், நெட், ஷீல்ட், மூன்றுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். அமைச்சரவர்கள் பதில் சொல்லிவிட்டால் அமைச்சவரர்களின் அந்தப் பதிலை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்பு கொடுத்திருக்கிறீர்கள். மீண்டும் மீண்டும் திரு. வினாயகம் அவர்கள் வற்புறுத்துவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

புதிதாகப் பிரிக்கப்பட்ட வட்டங்களுக்கு கிராம அதிகாரிகள்.

* 540 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் புதிதாக பிரிக்கப்பட்டிருக்கிற வட்டங்களுக்குப் புதிதாக கிராம முன்சீப், கிராம கர்ணம் நியமிக்கின்ற செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, சர்வே அண்ட் செட்டில்மெண்டுக்குப் பிறகு ஏறக்குறைய ரூ. 2,000 வரி வசூலிக்கக் கூடிய நிலையிலே இருக்கிற ரெவினியூ கிராமங்களை ஒன்றிணைத்து அதற்குப் புதிதாக கிராம முன்சீப்கள், கிராமக் கர்ணங்கள் போட வேண்டுமென்ற ஒரு செயற் குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதே, அது எப்படி செயல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது இந்தக் கேள்விக்குச் சம்பந்தப்பட்டது அல்ல. தாலூகாக்கள் இருக்கின்ற நேரத்திலே கிராமங்களில், ஒவ்வொரு கிராமமும் இன்னொரு தாலூகாவுக்கு மாறி இருக்கலாம். ஆனால், கிராமங்களை மாற்றித் தனியாக வேறு மாறுதலான கிராமங்கள் அமைக்கிற முயற்சி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, ரூ. 2,000 வருமானம் உள்ள கிராமங்களை ஒன்றிணைத்து சர்வே அண்ட் செட்டில்மெண்டுக்குப் பிறகு புதிதாக வட்டங்களாகப் பிரித்து அதற்கு வட்டவாரி என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அதற்காக ஒரு கிராம முன்சீப், கிராமக் கர்ணம் போடுகின்ற உத்தேசம் சர்க்காரினுடைய கவனத்திலே இருந்து வருகிறது. நான் கேள்வியிலே, "வட்டவாரி" என்று தான் கொடுத்துள்ளேன். புதிதாக ஆரம்பித்திருக்கிற "வட்டவார்ரி" என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தான் ஆங்கிலத்திலே "நியூலி பார்ம்ட்

டாலுக்ஸ்'' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நான் குறிப்பிட்ட செயற்குறிப்பின்மீது சர்க்கார் விரைவிலே முடிவெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அப்படித் திருத்தப்பட்டு, ஆங்கிலத்திலும் தமிழிலும் அடுத்த சட்டமன்ற கூட்டத்தில் தனியாக ஒரு கேள்வி உறுப்பினர் கேட்டால் அதற்குப் பதில் அளிக்கப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி.

*532 வினா—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு, வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கல்லூரி ஒன்று அமைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இம்மாநிலத்தில் புதியதொரு வேளாண்மைக் கல்லூரியைத் தொடங்குவது, அதனை எங்கு அமைப்பது என்பதுபற்றிய செயற்குறிப்பு ஒன்றை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகின்றது.

திரு என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தொழில் துறையில் மட்டுமே சிறந்து விளங்கும் வட்டத்தில் விவசாயக் கல்லூரி இருக்கும் போது தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கக்கூடிய ஆடுதுறையில் ஒரு விவசாயக் கல்லூரியை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா ? அதைத் தற்போது இல்லாவிட்டால் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தஞ்சை நெற்களஞ்சியம் மாத்திரம் அல்ல, தஞ்சையிலே நெல் ஆராய்ச்சி நிலையமும் இருக்கிறது. மண் ஆராய்ச்சி நிலையமும் ஆடுதுறையிலே அமைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இதிலே இருக்கிற முக்கியமான பிரச்னை ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமானால் குறைந்தபட்சம் 2 கோடி ரூபாய் செலவாகும். அதில் பொது மக்கள் பங்காக 25 இலட்சம் ரூபாயும் அந்த கல்லூரிக்குத் தேவையாகக் கிட்டத்தட்ட குறைந்தபட்சம் 400 ஏக்கர் நிலமும் வேண்டும். பொதுமக்கள் சார்பிலே அவர்கள் பங்காக 400 ஏக்கர் நிலமும் 25 இலட்சம் ரூபாயும்—தஞ்சை மாவட்டத்திலே நிறைய செல்வந்தர்கள் நிலவுகிற காரணத்தினால்—அங்கே கொடுப்பார்களானால் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் போகவேண்டிய அவசியம் கிடையாது. அடுத்த ஆண்டிலேயே துவக்கக்கூடிய சூழ்நிலை உருவாகலாம்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவர் அவர்களே, நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில், அதுவும் கீழைத் தஞ்சை மாவட்டத்தில் இருக்கக் கூடிய திருவாரூர் நகரத்தில் இந்த விவசாயக் கல்லூரியை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கீழைத் தஞ்சையில் மட்டும் அல்ல, மேற்கு தஞ்சையிலும் அந்தக் கோரிக்கை இருக்கிறது. திருவாரூர் என்று குறிப்பிட்டதனாலே அதற்கு முதல் சலுகை கிடைக்கும் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட நிலைமை அல்ல. நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி, 25 இலட்சம் ரூபாயும் 400 ஏக்கர் நிலமும் திருவாரூரில் இருக்கிற செல்வந்தர்கள் கொடுத்தாலும் அங்கேயும் அதைக் கொடுப்பதற்கு யோசிக்கலாம்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், தூத்துக்குடியில் இருக்கிற ஒரு வியாபாரப் பிரமுகர் ஏராளமான பணமும், நிலமும் நன்கொடையாகத் தர முன்வந்ததாகத்தகவல் வெளிவந்தது. அப்படி அவர் தர விரும்பினால் இந்த விவசாயக் கல்லூரியைத் திருநெல்வேலி மாவட்டத்தில் அமைக்கின்ற உத்தேசம் அமைச்சர் அவர்களுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.